தமிழர் நேசன்

(தமிழர் கல்விச் சங்கத்துப் பத்திரிகை)

தொட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு—திருக்குறள்

தொகுதி IV. { ரௌத்திரி௵ மாசி௴ } பகுதி 11.

ஒன்பதாவது கிரகம்.

The Ninth Planet.

ஸ்ரீமான் P.N. அப்புஸ்வாமி ஐயர், B.A., B.L., எழுதியது.

ஒன்பது கிரகங்கள் உண்டென்பது இந்து பௌராணிகர் கொள்கை. சூரிய மண்டலத்தின் நடுநிலையாகும் சூரியனையும், உருப்பில்லா இராகு கேதுக்களையும், உபகிரகமேயாகும் சந்திரனையும் சேர்த்தே ஒன்பது ஆகின்றமையால் இவற்றை நீக்கி எண்ணினால் ஐந்து கிரகங்களேயாகின்றன. எனினும் அவர்கள் பிரபஞ்சத்தின் நடுநிலையென்று கருதிவந்த பூமியும் மெய்யாக ஒரு கிரகமேயாதலால், அவர் அறிந்தவை ஆறு கிரகங்கள் என்பதாயிற்று.

ஹெர்ஷல் என்னும் ஜெர்மானிய-ஆங்கிலேய வானசாஸ்திரி தற்செயலாய் யூரனஸ் என்னும் ஏழாம் கிரகத்தைக் கண்டுபிடிக்கும்வரை கிரகங்களின் எண் ஆறாகவே இருந்துவந்தது. பின்பு எவ்வாறு ஆடம், லெவெரியர் என்னும் இருவர் எட்டாம் கிரகமாகும் நெப்ட்யூனைக் கண்டுபிடித்தனரென்பது நமது நேசனில் முன்பு கூறப்பட்டிருப்பதால் இங்கு அதை எடுத்துக் கூறவில்லை.

* தமிழர் நேசன் I-ம் பகுதியில் 445-447-ம் பக்கங்களைப் பார்க்க.

தற்செயலாக ஒன்றும், கணக்கினால் ஒன்றும் இவ்வாறு இரு கிரகங்கள் கண்டுபிடிக்கப்படவே சிலர் தமக்கும் அதிர்ஷ்டம் நேராதா வென்று தூரதிருஷ்டிக் கண்ணாடியில் கண்களை ஒட்டிக்கொண்டு வானத்தை நோக்கிய வண்ணமாயும், சிலர் கடிதத்தையும் எழுதுகோலையும் முன்வைத்துக்கொண்டு கணக்குப்போட்ட வண்ணமாயும் இருக்கத்தொடங்கினர். இவ்வாறு கிட்டத்தட்ட எண்பது வருஷங்களாயின. புதிதாக ஒன்றும் கண்டுபிடிக்கப்படவில்லை.

இப்பொழுது டாக்டர் எரிக் டூலிட்டில் (Doctor Eric Doolittle) என்பவர் ஒன்பதாவது கிரகம் ஒன்று இருப்பதாகக் கூறுகிறார்.

இவர் சிறிதுகாலமாக யூரனஸ்ஸை நன்கு கவனித்துவந்திருக்கிறாராம். இது சூரியனைச் சுற்றிக் கிரமமாக ஓடவேண்டியபடி ஓடிவரவில்லையாம். இதற்குக் காரணம் இதுவரை சூரியமண்டலத்தின் எல்லையென்று கருதப்பட்டுவரும் நெப்ட்யூனுக்கு அப்பாலுள்ள ஒரு கிரகம் இதை இழுத்துச் சரியான வழியை விட்டு விலக்கியும், ஒழுங்கான வேகத்தோடு ஓடாமல் தடுத்தும் நெறிதப்பி நடக்கச்செய்வதினால்தானாம். இதனால் உண்டாகும் வேக மாறுபாட்டையும், வழிவிலக்கையும் நன்கு ஆராய்ந்து கணக்கிட்டதில் இப்புதிய கிரகத்தைப் பற்றிச் சில விஷயங்களை அறிந்துகொள்ள முடிந்திருக்கிறதாம்.

இது சூரியனிடத்திலிருந்து நற்பது கோடி மைலுக்கப்பாலிருக்கிறதாம். சூரியனைச் சுற்றி ஓடிவர இதற்கு 283 வருஷங்களாகின்றனவாம். பூமியைப்போல் ஐந்து பூமி அளவுள்ளதாம். ஆதலால் நமது கண்ணுக்குத் தூரதிருஷ்டிக் கண்ணாடி வழியாயும் கூட எளிதில் புலப்படாதாம்.

இவ்வளவும் ஊகமேயாயினும், கணக்கிலிருந்து இவை பெறப்படுதலால் நாம இவற்றைப்பற்றிச் சிறிது ஐயமுறலாமேயன்றி ஒப்பமுடியாதென அடியோடு தள்ளமுடியாது. நடக்க நடக்கப் பார்த்துக்கொள்ளுவோம்.

பிள்ளைப் பூச்சி.

The Mole-Cricket.

சென்னைப் பிரசிடென்சி கலாசாலையில் உயிர் நூலாசிரியரா யிருக்கும் ஸ்ரீமான் R. கோபாலஐயர், M.A., L.T., எழுதியது.

பிள்ளைப்பூச்சி என்பது நமது வீடுகளில் சிற்சில காலங்களில் காணப்படும் பிராணி. சாதாரணமாக மழைக்காலத்தில் சாக்கடை வழியாக இது வீட்டினுள்ளே வந்துவிடும். அப்போது இது அகத்தினுள் தென்படுமென்றாலும் மரமடர்ந்த ஈரமான தோட்டங்களில் வசிப்பதுதான் இதற்கு மிகப்பிரியம். நமது வீடுகளில் தென்படும் பற்பல பிராணிகளில் இது ஒன்றாயினும் இப்பிராணியைப் பார்க்காதவர்கள் பலர் உளர். இதற்குக் காரணம் இப்பிராணி சிற்சில காலங்களில் மட்டும் வெளிப்படுவதுடன், பூமியினுள் வசிக்கும் இயற்கையைப் பெற்றிருப்பதுமே. இது பூமியினுள் வசிக்கத் தானாகவே சிறு பள்ளங்களையும், வளைகளையும் தோண்டிக்கொள்ளும் சக்தியையுடையது. மண்புழு, மண்குளவி, முதலிய மற்றப் பிராணிகளின் வளையிடுக்குகள் அகப்பட்டாலும் அவ்வளைகளைத் தம்வாழ்வுக்கேற்றபடி சரிப்படுத்தித் தாம் வசிக்கச் சௌகரியமான வசதிகளாக மாற்றி உபயோகப்படுத்திக் கொள்ளப் போதுமான சாதுரியமுள்ளது.

பிள்ளைப்பூச்சியானது கக்கலாத்து, வெட்டுக்கிளி முதலிய பூச்சிகளின் பொது இனத்தைச் சார்ந்தது. மற்றப் பூச்சிகளுக்கிருப்பதுபோலவே இதன் தேகம் தலை, மார்பு, உடல் எனப்படும் பாகங்களாலாகியது.

தலை.—உடலின் அளவை நோக்குங்கால் இது சற்று சிறியது என்றே சொல்லவேண்டும். சிறிது மார்பினுள்ளிழுக்கப்பட்ட தோற்றமுடையது. ஸ்பரிசக் கொம்புகளும் கண்களும் நன்கமைந்துள்ளன. ஆனால் கரப்பானுக் கிருப்பது போல இதன் ஸ்பரிசக் கொம்புகள் அவ்வளவு நீளமாயிராமல் சற்று குட்டையாயிருக்கும்.

பிள்ளைப் பூச்சி.

மார்பு.—இது முட்டைவடிவமானது. முன்பக்கம் குறுகியும் பின் சிறிது அகன்றுமிருக்கும். இவ்விதமிருப்பது தோண்டிச்செல்லக் கொஞ்சம் சௌகரியமாயிருக்கிறது என்று நினைக்கவேண்டியிருக்கிறது.

உடல்.

நீண்டு உருட்சியாய்ப் பலவளையங்களாலாகியது. இதன் இறுதியில் நீண்ட ஒருஜோடி "முட்டைவைப்பி"கள் உண்டு.

இரக்கைகள்

முதல்ஜோடி இரக்கை குட்டையாயும் தடிமனாயு மிருக்கும். இதனால் பூச்சி பறந்துசெல்வதற்கு ஒரு பிரயோஜனமுமில்லை. பின்ஜோடி இரக்கைகளைவிடச் சிறியதாயிருப்பதனால் அவ்விரக்கைகளை மூடிக்காப்பற்றவும் உதவாது. பின்ஜோடி இரக்கைகள் மிகவும் மெல்லியதாயிருப்பதால் ஒரு சிறிய விசிறிபோல் மடக்கப்பட்டு உடலுக்குப்பின் சற்று நீட்டப்பட்டிருக்கும். இவ்விரக்கைகளே பூச்சி பறப்பதற்குச் சாதகமானவை.

கால்கள்.

மிகவும் விசித்திரமாய் அமைந்துள்ளன. முதல் ஜோடி தடித்து, குட்டையாய்ப் பல முட்களுடனிருப்பதால் மண்ணைத் தோண்டவும், அவ்விதம் தோண்டும்போது தடை செய்யும் சிறிய வேர்களைத் துண்டிக்கவும் ஏற்றபடி அமைந்துள்ளன.

நடு ஜோடிக்கால்கள் சதாரணமானவை. பின் ஜோடிக் கால்கள் பருத்து, நீண்டு பலமாயிருப்பதால் பூச்சி தத்திக் குதிக்க மிகவும் பிரயோஜனமாகின்றன.

வாழ்க்கை

பெண் பிள்ளைப் பூச்சியானது ஒரு தடவைக்கு 200 முட்டைகள் முதல் 400 முட்டைகள் வரைக்கும் முட்டைகளிடும். தாய்ப்பூச்சி இம்முட்டைகள் வெடித்துக் குழந்தைப்

பிள்ளைப் பூச்சிகள் வெளிவரும் வரைக்கும் அவற்றைக் காவல் காக்கும். ஆண்பூச்சியை முட்டைகளிடம் அணுக விடுவதில்லை. இவ்விதம் செய்வதற்கு காரணம் என்னவெனில் ஆண்பூச்சிகள் சில வேளைகளில் முட்டைகளைப் புசித்து விடுவதே. பிள்ளைப்பூச்சியானது சுவர்க்கோழிகளைப்போலவே கீச் என்னும் சத்தம் செய்யக் கூடியது. ஆனால் இச்சத்தம் சுவர்க்கோழியின் சப்தத்தைப் போலக் காதை துளைத்து விடுவது போலிராது. சிறிது மந்த மாயிருக்கும். இவ்வாறு ஒரு பூச்சி செய்யும் சப்தமானது தன் இனத்தைச் சேர்ந்த மற்றைப் பூச்சிகளுக்குக் கேட்பதற்காகவே செய்யப் படுகின்றமையால எல்லாப் பிள்ளைப் பூச்சிகளுக்கும் காதுகளிருக்க வேண்டும். இக்காதுகள் பூச்சிகளின் தலைகளில் வைக்கப்படாமல் விபரீதமாக முன் ஜோடிக்கால்களில் காலுக்கு ஒரு சிறு துவாரமாக அமைந்துள்ளது. இதுவே இப்பூச்சியின் காதாகும்.

பிள்ளை பூச்சிகள் தோட்டத்தில் வசிப்பதனாலும்; அடிக்கடி வேர்களைத் துண்டிப்பதனாலும் தோட்டக்காரர் இப்பிராணியைப் பேணுவதில்லை. ஆயினும் இப்பிராணி செடிகளுக்குப் பழுது செய்யும் புழுக்களை உண்டு சிற்சில வேளைகளில் அவருக்குத் துணை செய்வதால் இது மனிதனுக்கு முற்றிலும் தீங்கிழைக்கும் பிராணி யாகாது.

சோதிட சாத்திரமும், அதன் நோக்கமும்.

Astrology and Its Purpose.

ஸ்ரீமான்கள் S. K. பார்த்தசாரதி B.A., B.L.
V. K. பார்த்தசாரதி B.A., B.L. எழுதியது.

விண்ணில் விளங்கும் சூரியாதி கிரகங்களே மண்ணில் நிற்கும், மனுஷ்ய கோடியாவற்றிற்கும், மற்றுமுள்ள மிருக, பக்ஷி, புல், பூண்டு முதலாய முழுமைக்கும் ஜீவதாரமென்பது சாஸ்திர வாராய்ச்சிக்காரர்களால் ஒரே திடமாய் ஏற்படுத்தப்பட்ட விஷயம். சூரியனில்லாவிடில் எவ்விதச் சீவராசிகளும் உயிர் பெற்றிரா. கடவுளது விராட்ஸ்வரூபத்தில் இத்தகைய சூரியாதி கிரகங்களடங்கிய கோளங்கள் பல இருக்கின்றன. இவற்றுள் ஒன்றும் நாம் வசித்து வரும் பூகோளம். எப்படி, நமது உடலிலிருக்கும் பற்பல இந்திரியங்களும் உறுப்புக்களும், ஒன்றுடன் மற்றொன்றாக ஒருமித்து வேலைசெய்து, நமது இஷ்ட நோக்கங்களைச் செய்து முடிக்க வல்ல கருவிகளாகின்றனவோ, அப்படியே, இவ்விராட்ஸ்வரூபத்தின் பற்பல இந்திரியங்களும் உறுப்புக்களும் போன்ற இப்பலவாய கோளங்கள், ஒன்றுடன் மற்றொன்றும்; அவை ஒவ்வொன்றினுள்ளும், ஒவ்வோர் பாகமும் மற்றைய பாகங்களுடனும்; ஒருமித்துச் சிருஷ்டிக் கர்த்தாவின் நோக்கங்களை நிறைவேற்ற வல்ல சாதனங்களாகின்றன. எனவே, கர்த்தாவின் உள்ளக்கருத்தையும்

சோக்கத்தையும் வெளிப்படுத்தி அன்றாத ஏற்பாடுகளைப் பூர்த்தி செய்விக்க உதவும் கருவிகள் போன்ற இவ்விராட்ஸ்வ ரூபத்தின் பல பாகங்களை, கவனியாது விடாமல், அவை உணர்த்தும் குணகுண பலாபலன்களைக் கவனித்து அறிந்து கொள்ளவேண்டுவ தவசியம்.

ஆயின், இதை எப்படி அறிந்துகொள்வது? —'வான சாஸ்திரவாராய்ச்சியினால். அதாவது விண்ணில் விளங்கும் யாவற்றையும் கவனித்து, ஆராய்ந்து, அவற்றைப்பலர்க்கும் விளங்கும்படி படங்களின் மூலமாய் வெளியாக்கி, அப்படங்களைப் படித்தறிவதினால் அறிந்து கொள்கிறோம். மனுஷ்யனுக்குண்டாகக் கூடிய பலாபலன்களையும், மற்றும் அவனது இதர குண குணங்களையும் அறிந்துகொள்ளும் வகையும் இம்மாதிரியே. அதைப்பற்றிக்கூறும் சாஸ்திரமே சோதிட சாஸ்திரம். உலகத்தில் நடக்கப்போவதை எப்படி வானப் படங்களை ஆராய்வதால் அறிந்துகொள்ளுகிறோமோ, அப்படியே மனிதனும் தனக்கு நடக்கப்போகும் விஷயங்களை ஆராய்ச்சி செய்வோர்க்கு வெளிப்படுத்தக் கூடிய தன்து ஜனனகால படத்தைத் (ஜாதகத்தை) தன்னுள் வைத்திருக்கிறான். விண்ணிலிருக்கும் கிரகங்களின் நிலை இவனது ஜனனகால படத்திற்கேற்ப இணங்கி வருங்காலத்துத் தான் இவன் மண்ணில் மனிதனைப் பிறக்கிறான். அதையே நாம் 'ஜனனகாலம்' என்று சொல்கிறோம். இதைக்கொண்டே அவனது ஜாதகத்தைக் கணிக்கவாரம்பிக்கிறோம். ஜனனகாலத்தில் கிரகங்கள் நிற்கும் நிலையே இப்படி ஜன்மமெடுக்கும் ஆத்துமாவின் குண குணங்களையும், மற்றும் அது வரையில் அது எடுத்திருக்கும் பல ஜன்மங்களின் மாதிரியையும் ஒரு சிமிழியில் அடைத்துக் காட்டுவதுபோல் அவனது ஜாதகத்தின் மூலமாய் விளங்கத் தெரிவிக்கின்றது. ஒவ்வொரு மனிதனும் குணத்திலும், புத்தி

விசேஷத்திலும், தேகவலிமையிலும் ஒருவனைப்போ லொருவ னிருப்பதில்லை யென்பது யாவரு மறிந்த விஷயம். ஏன்?— இதன் காரணம் ஜனனகாலத்தில் கிரகங்கள் நிற்கும் நிலையின் இருப்பினலும் குணத்தினலும் தெரிவிக்கப்படும். கிரகங்க ளது சாரத்தினலுண்டாகும் மாறுதல்களும், அவை ஒன்றை யொன்று பார்த்துக்கொள்ளும் பார்வையின் விசேஷமும், அதாவது, அவற்றின் ஒளிகளின் கோணங்களும் (angles of their aspects) மற்றும், நமக்கும் அவற்றிற்கும் இடையே யுள்ள தூரத்தின் அளவும், நமக்குக் குறைவாகவோ அதிக மாகவோ உண்டாக விருக்கும் பலா பலன் களைக் காட்டி வருகின்றன. இவற்றை யெல்லாம் நோக்கில், தனது ஏற் பாடுகளையெல்லாம் செய்துமுடிக்கும்பொருட்டே சிருஷ்டி கர்த்தா பல ஆத்மாக்களை யுண்டாக்கி, அவற்றிற்கு உடலு முயிருமளித்து உலகில் மனுஷ்ய கோடிகளாகச் சிருஷ்டித் தார் போலுமென்றே நினைக்கவேண்டியதாயிருக்கிறது. இப் படிச் சிருஷ்டிக்கப்பட்ட மனிதர்கள் ஒவ்வொருவரும் தத்தஞ் செயல்களினல் கர்த்தாவின் நோக்கத்தை வெவ்வேறு விதத் தில் நிறைவேற்றி வருகிறார்கள். ஒவ்வொருவனும் தனது குணவேறுபாட்டைப் பொறுத்தும், திறமையின் வேறு பாட்டைப் பொறுத்தும் மனோவாக்குக் காயமாகிய திரி கரண வுபயோகத்தினல் தன் கடமையைச் செய்துமுடிக் கிறான். எனவே தான் ஒருவன் மற்றொருவனைப்போ லிருப்பதில்லை. இவ்வேறுபாடுகளையும், ஒவ்வொருவனும் இவ் வுலகில் செய்ய இருக்கும் காரியங்களையும் அவனவனது ஜாதகத்தினின்று தெரிந்துகொள்ளலாம். இதைவிளக்குவதே ஜோதிட சாஸ்திரத்தின் பிரதான நோக்கமாகும்.

நமது ஹிந்துமதக் கோட்பாடுகளின்படி 'ஜ்யோதிஷ சாஸ்திரம்' அல்லது 'முன்னறிதல்' என்ற ஞானசக்தி, வேத

த்தின் 'ஆறு அங்கங்களில்' ஒன்றாகும். இக் கோட்பாடுகளின்படி, தன்னை யுணர்தல், தீக்குணமொழித்தல், திடமுடைமை, இம்மூன்றுமே நாம் அடைய விரும்பத்தக்க முக்கிய குணாதிசயங்கள். இவற்றைப் பெற விரும்புவோமாகில் நமக்கிருக்கும் தேகவலியையும், நம்முள் ஒளிந்திருக்கும் நமது திறமையையும், அம்முயற்சியில் நமக்குறக்கூடிய இடுக்கண்களையும், மற்றும் நமது நோக்கத்தை விரைவிலடையக்கூடிய மார்க்கங்களையும், நமக்கு 'அனுகூலமானவையிவை,' 'பிரதிகூலமானவையிவை' என்றறியக்கூடிய ஞானசக்தியையும், முறையே அவற்றை அடையவோ விலக்கவோ வேண்டிய ஏற்பாடுகளையும், நம்மைத் துன்மார்க்கத்தினின்றும் விடுவித்துச் சன்மார்க்கத்தில் பிரவர்த்திப்பிக்க யாவற்றையும் கசடறத் தெரிந்துகொள்ளவேண்டுவது அவசியமாகின்றது. ஆயின் இதை எப்படி அறிவது?

நமது ஜாதகத்தினின்றே தான்—நமக்குண்டாக விருக்கும் நன்மையோ, தீமையோ, இடுக்கணோ, துணையோ—யாவும் நம் ஜாதகத்தில் சுக்கிரன, செவ்வாய், சனி, குரு இவர்களால் தெரிவிக்கப்படும். எனவே, ஜாதகமென்பது நமக்கு நேரிடக்கூடிய பல சம்பவங்களையும், நமக்கிருக்கும் குணகுணங்களையும் தெளிவாய் விளக்கக்கூடிய கருவியாகின்றது. சோதிடசாத்திரமென்பது, நாம் நமது முன்னேற்றத்தையே பிரதான நோக்கமாக வைத்துக்கொண்டு, அதை அடையும் பொருட்டு நமக்கிருக்கும் காரணசக்தி அல்லது பகுத்தறியும் திறமை என்னும் சக்தியின் சரியான உபயோகத்தினால் அதிக இடுக்கண்கள் நேரிடக்கூடாத ஒரு வழியை முன்னதாகவே தேர்ந்தறிந்து, அதையே முற்றிலுங் கடைப்பிடித்துச் சென்று நமது கோரிக்கையை ஈடேற்றிக்கொள்ளும் வழியைப் போதிக்கும் சாஸ்திரமாகும்.

இவ்வுலகைச் சிருஷ்டித்த கர்த்தா எதனின்று இதைச் சிருஷ்டித்தாரோ அதனின்று தான் வேறுபட்டு உயர்வுபெற்றிருப்பதைப்போல், மனுஷ்ய கோடிகளாகிய நாமும் நம்மைச் சுற்றிலுமுள்ள இதர ஜீவகோடிகளினின்றும் வேறுபட்டு உயர்வுபெற்றிருக்கிறோம். ஏனெனில், நமது முடிவை விதித்துக்கொள்ளும் சக்தியும், நமது நடவடிக்கைகளை நடத்திக்கொள்ளும் திறமையும், நமது நடத்தைகளைச் சீர்ப்படுத்திக்கொள்ளும் வல்லமையும் நமது கையிலே இருக்கின்றன. நமது வாழ்க்கைக் கப்பலை யோட்டும் மாலுமியும் நாமே, அக்கப்பலின் தலைவனும் நாமே. அப்படியிருக்க நாம் பிறக்கும் பொழுதே 'இவ் இக் குணமுடையோம்' 'இவ் இச் செய்கை செய்வோம்' 'இவ் இம் முடிவடைவோம்' என்று, நம்மினும் சிறந்ததோர் வஸ்துவின் விதிக் குட்பட்டிருக்கிறோம் என்பது உண்மையாகுமோ? ஆராய்ந்துபார்ப்போமாகில், இப்படிச் சொல்வது சிறிது உண்மையாயிருப்பினும் முற்றிலும் உண்மையாயிராதென்றே தெரியவருகிறது. இப்பிறப்பிற்குமுன்னர், நாம், ஒன்றோ, பலவோ இதர ஜன்மங்களெடுத்திருக்கிறோம். பூர்வஜன்மத்தில் மனோவாக்குக்காயங்களின் உபயோகத்தால் ஒவ்வோர் மாதிரி எண்ணிப் பேசி நடந்துவந்திருக்கிறோம். அவ்வெண்ணங்களும், பேச்சுக்களும், நடத்தைகளும் நம்மைத்தாக்கி நிலதிடமான பலாபலன்களையும், குணாகுணங்களையும் நம்மிடம் உண்டாக்கிவிடுகின்றன. பூர்வஜன்மத்தில் நாமே சம்பாதித்துக்கொண்ட இப்பலாபல குணாகுணங்களின் காரணத்தினால் அவற்றிற்கேற்றபடி குறித்த ஓரிடத்தில், குறித்த ஒருமாதிரி, நம் வாணாட்களைக் கழிக்கும்பொருட்டு இப்பிறப்பெடுக்கிறோம். இப்படிக்கு நாம் பூர்வஜன்மத்தில் திரிகரணத்தாலும் செய்தவற்றின் குணாகுணங்களும், அதற்காக இப்பிறப்பில் அநுபவிக்கவேண்டிய

பலாபலன்களும் நமது 'ஜனனகாலபடமாகிய' ஜாதகத்தின் மூலமாய்த் தெரிவிக்கப்படுகின்றன. அதாவது, கிரகங்கள், அவை விண்ணிலிருக்கும் ஸ்தானம், ராசி, வீடு, அவற்றின் பார்வை விசேஷம், நட்பு, பகை, உச்சம், நீசம், ஆட்சி முதலாகிய இவற்றை ஆராய்வதால். எனவே, முற்பிறப்பில் செய்த சில கருமங்களுக்காக சில பலன்களை அனுபவிக்கவேண்டுமென்று நமக்கு விதிக்கப்பட்டிருக்கிறதென்பது உண்மையே. இவ்வளவுமட்டுந்தான் நமக்கு விதிக்கப்பட்டிருப்பது. இப்பிறப்பு எடுத்தபிறகு, காரணசக்தி அல்லது பகுத்தறியுந் திறமையைப் பெற்று அதை உபயோகிக்கும் திறமை நம்மிடமில்லாதிருக்குமாகில் நாம் என்றென்றைக்கும் விதிக்குட்பட்டிருப்போம் என்பது உண்மையாகும். ஆனால் இப்பிறப்பில் நமது சுய இச்சைப்படி நினைப்பதினின்றும், பேசுவதினின்றும், செய்வதினின்றும் நம்மைத் தடுக்கத் துணிவோர் எவருமிலர். நாம் பகுத்தறியுந்திறமை பெற்றவராகி, சாஸ்திரவாராய்ச்சிசெய்து, புத்தியுக்திகளை உபயோகித்து நமது சுயேச்சைப்படி நடக்கும் திறமையைப் பெறுகிறோம். எனவே நாம் என்றென்றைக்கும் விதிக்குட்பட்டிருக்கிறோம் என்பது பொய்யே. காரணசக்தியை யுபயோகித்து, புத்தியுக்திகளால், வரும் தீங்கை முன்னமேயே யறிந்து அதை விலக்க முயலுபவனே 'விதி'யையும் வென்று சுயேச்சைப்படி நடக்கும் வல்லமை பெறுபவன். அப்படிக்கின்றி, 'வருவன வந்தேதீரும்' என்று சொல்லி, வரப்போகுமவற்றை முன்னதாகவறிந்து நடக்க எத்தனஞ்செய்யாமல் சும்மாயிருப்பவன் தன்வாணுள் முழுவதையும் 'விதிக்கு' அடிமையாகக் கழிக்க வேண்டியவனே.

எனவே, நமக்கிருக்கும் குணகுணங்களையும், உண்டாகப் போகும் பலாபலன்களையும் நாமே நமது சுயேச்சையின்பேரில்

உண்டாக்கிக் கொள்கிறோமேயொழிய பிறரால் உண்டாக்கப் படுவனவல்ல வென்பதைத் தெளிவாக்கினோம். அப்படிக் கிருக்க, எவ்விஷயத்திலாவது தவறுவோமாகில், எவ்விதக் குற்றமாவது செய்வோமாகில், அல்லது எத்தகைய அவமான மாவது அடைவோமாகில் அதற்கு யார் உத்தரவாதம்? அதற் காக நம்மைத்தவிர வேறு எவரை நொந்துகொள்வது? அது யாருடைய தவறு? நமதேயன்றோ? நம்மைச் சிருஷ்டித்தவன் உண்மையுடனும், ஆசாரத்துடனும், நியாயத்துடனும் நடக் கும்படிச் சொல்லி; நல்வழி இது, தீவழி இது, என்பதையுங் காண்பித்துக் கொடுத்துவிடுகிறான். பிறகு தவறுகள் இழைத் தலும், துன்மார்க்கத்தில் பிரவேசித்தலும் நமது இஷ்டம்; நமது சுவேச்சையின்பேரில். அப்படிக்கிருக்க, நமது செய்கை களெவ்வொன்றும் கர்த்தாவினால், முதல் முதலிலேயே விதிக்கப்பட்டு, பிறகு எக்காரணத்தினாலும் எவராலும் மாற் றப்படக்கூடாதவை போலாகின்றன என்றெண்ணி, நாம் செய் யுங் குற்றங்குறைகளுக்கும், அடையுங் கஷ்டநஷ்டங்களுக் கும் நமது பிறப்பையோ, நம்மைப்பிறப்பித்தவனையோ, அல் லது நமது 'விதி'யையோ பழித்தல் நியாயமாகாது. உண்மை யில் ஆக்ஞையிடுவதும் நாம், அதைச்செய்து முடிப்பதும் நாமே. நமது செய்கைகளின் கர்த்தாவும் நாம், அவற்றுள் 'குற்றமிது' 'குணமிது' எனத் தேர்ந்தெடுத்துச் செய்யவேண் டிய அதிகாரியும் நாம்தான். நமது சுயேச்சையின்படி நடக் கும்பொருட்டே நாம் சிருஷ்டிக்கப்படுகிறோம். நமது 'குடிகெடுக்கு நெஞ்சிற்குக் குற்றேவல்' செய்யாதிருக்கும் வரை நமது சுயேச்சையை உடையவராவோம்.

நாமோ பிறந்தாய்விட்டது. நமது நடவடிக்கைகளை நடாத்தவேண்டுபவரும் நாமேயொழியப் பிறர் எவருமில்லை. பூர்வஜன்மத்தில் செய்த சிலகருமங்களுக்காக இப்பிறப்பில்

சில அனுபவங்களுக்குள்ளாக வேண்டியிருப்பினும் நமக்கிருக்கும் பகுத்தறியுந் திறமையைக் கொண்டு "காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்" ளென்றவாறு நமக்குவரப்போகுமவற்றை முன்னதாகவே அறிந்து, குற்றங்களை நீக்கிக் குணங்களைக்கைக் கொண்டு, தீமையை விலக்கி நன்மையையே மேற்கொள்வோமாகில் இனியாவது சுகம்பெற்றிருக்கலாம். 'விதி' என்றுலென்ன ? 'கர்மம் என்பது யாது ? யாவும் நமது செயல்களின் காரணார்த்தமாய் உண்டாவனதாமே. இதனால் வருவனவற்றை முன்னமேயே அறிந்துகொள்பவனுக்கு எவ்விதக் கஷ்டதுக்கங்களும் உண்டாகா என்றுசொல்ல வரவில்லை. அவனுக்கும் சில கஷ்டதுக்கங்களுண்டாகத்தானுண்டாகும். 'முன்னறிதலினால்' அவனடையும் இலாபமென்னவென்றால், திடீரென எதிர்பாராமலிருக்கையில் கஷ்டதுக்கங்களுக்குள்ளாகப்பட்டு மனமுடைந்துபோகாமல், தனக்கு வரப்போவனவற்றை முன்னதாகவே அறிந்துகொண்டு அவற்றைப்போக்கவோ பொறுக்கவோ வேண்டிய ஏற்பாடுகளைச் செய்துகொள்ளக் கூடியவனாகிறான். கஷ்டமென்பதையே அறியாமல் எப்பொழுதும் சுகமனுபவித்துக் கொண்டிருப்பவனுமுண்டோ ? 'முப்பது நாழிகை அழுதாருமில்லை முப்பது நாழிகை சிரித்தாருமில்லை' என்பதன்றோ உலகவழக்கு. மேலும், நமக்கு வரும் பலவிதத் துன்பங்களும் ஒருவிஷயத்தில் நற்போதனையையே போதிக்கின்றன. 'வெயிலிலிருந்தவனுக்கன்றோ நிழலினருமை தெரியும்.' சதா சுகத்திலும் சந்தோஷத்திலும் ஆழ்ந்திருப்பவர் தமக்குள் 'ஆத்மா' என்றதோர் வஸ்து இருக்கிறதென்றுவது, பாவபுண்யமென்பன உண்டென்றுவது, அல்லது சகல பூதங்களையும் படைத்துக் காத்து உண்டுஉமிழும் பரமனொருவனிருக்கின்றானென்றுவது நினைக்கிறார்களா ? இல்லை. அதே அவர், தமக்குச் சிறிது

துக்கமாவது கஷ்டமாவது உண்டாகுமாயின் ஐயோ! ஏன் என் 'ஆத்மா' இப்படி ஏங்கித் தவிர்த்து அலைகிறது!' என்று வருந்தி தெய்வமே! இதவும் உனது திருவிளையாடலோ?' என்று சிலரும், தெய்வமே உனக்குக் கண்ணில்லையா! உன் கோவிலிடி யாதா? எனச் சிலரும் பலவிதமாய்த் தெய்வத்தை நிணைக்கவும், இகழவும், துதித்துப் புகழ்ந்து தம்வசமாக்க முயலவும் ஆரம்பிக்கிறார்களன்றோ? ஏன்? துக்கப்பட்டதினால்! எனவே, நமக்குறும் இடுக்கண்கள் நம்முள் சிறிது 'ஆத்மஞானத்தை' உண்டாக்குகின்றன. ஆகவே நமக்கு வரப்போகும் நன்மையையுந் தீமையையும் முன்னதாகவே அறிந்து கொண்டு அதற்கேற்ப நடந்துகொள்ளவேண்டுமென்பது அத்தியாவசியமாகிறதல்லவா? 'முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்'. அப்படிச்செய்யாமல் சும்மாயிருப்போமாகில் எதிர்பாராத இடுக்கண்களை யனுபவித்து மனமுடைந்து துக்கக்கடலில் ஆழ்ந்துகிடக்க நேரிடும்.

"முயற்சி திருவினையாக்கு முயற்றின்மை
யின்மை புகுத்திவிடும்."

ஆயின், இதையெல்லாம் எப்படி யறிந்துகொள்வது? 'முன்னறிதல்' என்னும் ஞானசக்தியைப் பெறுவதினால். இச்சக்தியைப் பெறுவோமாகில், இப்பிறப்பில் பலஅனுபவ ஞானங்களைப் பெற்றவராகி, பல மறுபிறப்புகளுக்கு ஹேதுவாகும் பாபகிருத்தியங்கள் இன்னவையென்றறிந்து அவற்றை நீக்கும் வழியைத்தேடி, பரந்தாமனது பாதகமலங்களில் ஐக்கியப்பட்டு நித்தியானந்தத்தை யனுபவிக்கச் செய்யவல்ல நற்கிருத்தியங்களைத் தெரிந்து செய்து சுகிக்கக்கூடிய மார்க்கத்தைக் கற்றுக்கொள்ளுகிறோம். இத்தகைய 'முன்னறிதல்' என்னும் ஞானசக்தியைப் போதிக்கும் சாஸ்திரமே ஜோதிஷ சாஸ்திரம்.

ஆகவே, ஜோதிஷசாஸ்திர வாராய்ச்சி செய்வோமாகில், ஒருவனது ஜாதக மூலமாய் அவனது வாணாளில் அவனுக்கு நேரிடக்கூடிய சம்பவங்களை ஒன்றுவிடாமல் தெளிவுற எடுத்துக்கூறும் வல்லமை பெற்றவராவோம். ஆயினும் 'இது நிகழ்தல் கூடும்' என்று சொல்லமுடியுமேயொழிய, 'இது நிகழ்ந்தே தீரும்' என்று சொல்வதரிது. ஏனெனில் நம்முள் ஒவ்வொருவனும் தனது மனோவாக்குக் காயங்களின் செயல்களினாலன்றோ தனது வாழ்வின் பலாபலன்களை தீர்மானித்துக் கொள்கிறான்? 'பகுத்தறியுந் திறமை' பெற்றதும் 'நாம் விதிக்கப்பட்டிருக்கிறோம்' என்பது பொய்த்துவிடுகிறதல்லவா? உமது ஜாதகத்தைப்பார்த்து சோதிடவல்லான் ஒருவன் இவ்வருஷம் உமக்கோர் உயர்ந்த வேலையாகுமென்றுவது, இந்தத்தினத்தில் உமக்கோர் பிராணபத்துண்டாகுமென்றுவது மூற்கூறுவதாக வைத்துக்கொள்வோம். இவ்வேலையைப் பெற விரும்புவீரேல் அதற்குவேண்டிய பரீக்ஷையில் தேற வேண்டாமா? அதற்குவேண்டிய சிபார்சுகள் சம்பாதிக்கவேண்டாமா? இன்னும் எவ்வளவு பிரயத்தனங்கள் செய்யவேண்டாம். அப்படிக்கின்றி "சோதிடனே சொல்லிவிட்டான். இனி நானேன் சிரமப்படவேண்டும்" என்று கூறிப் பரீக்ஷைக்குப் போகாமல், சிபார்சும் தேடாமல், மற்றெவ்விதப் பிரயத்தனமுஞ் செய்யாமலிருப்பீரேல் பிறரா உம்மைத் தேடிவந்து உமக்கு வேலைகொடுக்கப்போகிறார்கள்? 'தெய்வம் காட்டுமேயல்லாது ஊட்டுமோ?' எனவே சோதிடன் சொல்லியதின் அர்த்தம் யாதெனில் 'இவ்வருடம் உமக்கு உயர்ந்த வேலை உண்டாகக்கூடும். ஆனால் அதைப் பெறவேண்டிய பிரயத்தனங்களைச் செய்தாலொழிய உண்டாகித்தீராது' இனி மற்றதை யெடுத்துக்கொள்வோம். உமக்கு நேரிடக்கூடும் ஆபத்தையறிந்தும் அதைப்போக்கிக்கொள்ள வேண்

டிய பிரயத்தனஞ் செய்தாலல்லவா நீர் அவ்வாபத்தினின்றும் தப்புவீர். இல்லாவிடில் எப்படித்தப்புவீர்? அவ்வாபத் துமக்கு வந்தேதீருமல்லவா? பிரயத்தனஞ் செய்வீராகில் ஒருவேளை அவ்வாபத்தினின்றும் தப்பினாலும் தப்புவீர். இதனால் சோதிடன் கூறியது பொய்த்ததே என்று சொல்வது நியாயமாகுமா? உமதுசெயல்களினாலேயே யன்றோ நீர் 'விதிக்கப்பட்டிருந்ததையும்' வென்று ஆபத்தினின்றுந் தப்பி வெளிவந்தீர்? எனவே சோதிடன் சொல்லியதின் தாத்பர்யமென்னவெனில் "இந்தத்தினத்தில் உமக்கோர் ஆபத்து உண்டாகக்கூடும். ஆயினும் அது உண்டாகியேதீரவேண்டுமென்பது அவசியமல்ல. தகுந்த முயற்சிகள் செய்வீரேல் அதனின்றும் தப்பலாம்" ஆதலால், சோதிடசாஸ்திரத்தைச் சரியானபடி படித்துச் சரியானபடி அர்த்தஞ்செய்வோமாகில் நமக்கு வர இருக்கும் யாவற்றையும் முன்னதாகவே தெரிந்துகொள்ளலாம். அவை 'நன்மை' எனத்தோன்றின் அவற்றைஉடனே பெறவேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வாரம்பிக்கவேண்டும். அவை 'தீமை' யெனத்தோற்றுமாகில் தக்கணமே அவற்றை விலக்கவேண்டிய ஏற்பாடுகளைச் செய்துமுடிக்க வாரம்பித்தல் வேண்டும். அப்பொழுதுதான் ஜோதிடசாஸ்திரத்தின் அருமையும், உண்மையான பிரயோஜனமும் சகலருக்குந் தெரியவரும். அப்படிச்செய்யாதவர் தான் 'ஜோஸ்யம் பொய்' 'ஜோதிடன் 'புளுகன்' எனப்பலவாறு தப்பபிப்பிராயங் கொண்டு சாஸ்திரத்தைக் குறைகூறுபவர். சோதிடசாஸ்திரம் பொய்யில்லை. ஆயினும் அதைக் கசடறக்கற்றுணர்தல் மிகவும் கடினமான வேலையாகும். 'புத்திமான் பலவான். சோதிட வல்லான் கிரகங்களை ஆள்வான். அவ்வல்லமை இல்லான் அக்கிரகங்களால் ஆளப்படுவான். முன்னறியும் சக்தியுள்ளவனே தன் சுயேச்சைப்படி நடந்து விதியை வெல்லுபவன், அஃதில்லாதவனே 'விதிக்குட்படுபவன்'.

யோசேப் கரிபால்டி.

Joseph Garibaldi.

ஸ்ரீமான் T. R. ராஜகோபால ஐயர் எழுதியது.

சுதேசாபிமானமாகிய விதையை விதைத்து, ஊக்கம், கல்வியறிவு, அடக்கம், இனிமைகளாகிய எருவிட்டு, ஒற்றுமையாகிய தெண்ணீரைப் பாய்ச்சவே, நாகரீகம் என்ற ஓர் இனிய செடியானது செழித்து மேலோங்கி வளர்ந்து, தைரியம் என்ற வலிய பட்டையினுற் காக்கப்பட்டு, சுதந்தரம், க்ஷேமம் அமைதி, இன்பம் என்ற பெருங்கிளைகிளைகளை நாலாபக்கங்களிலும் பரப்பி யாவரையும் மகிழ்வுறசெய்கின்றது.

சுதந்தரத்திற்கு மூலாதாரமாவது ஒற்றுமை. இவ்வொற்றுமையைப் பெருக்கிப் பலப்படுத்துவது சுதேசாபிமானம். சுதேசாபிமானமில்லாத ஜனங்கள் மேன்மையுற்று விளங்கார்கள். ஒற்றுமையும் கல்வியறிவுமில்லாத நாட்டினர் நிலைத்திரார்கள். பற்றில்லாத மனிதனும் பரஸ்பரவன்பு நிரம்பியிராத குடும்பமும் நிலைகுலைந்து மயங்கித் துக்கித்துக் கீழ்டைவதுபோல், சுதேசாபிமானமும் ஒற்றுமையும் பொருந்தியிராத தேசத்தினர் நாளடைவில் ஒழுங்குதவறித் தாழ்வுற்று அலறி மடிவார்கள்.

ஒவ்வொரு ஆன்மாவின் வளர்ச்சிக்கு எங்ஙனம் தேகமும் அதைக் காப்பாற்றவேண்டுமென்ற எண்ணமும் அவசியமானதோ, அங்ஙனமே ஒவ்வொரு ஜாதியார்க்கும் அவர்கள்

பிறந்து வளரும் இடமும் அதன்மீது பற்றும் இன்றியமையாதன. மனவலிமைக்கும் ஞானவளப்பத்திற்கும் எவ்வாறு திடசரீரம் பிரதானமாகின்றதோ, அவ்வாறே சுதந்தரத்தின் வளர்ச்சிக்கும் நாகரீகப் பெருக்கத்திற்கும் சுதேசாபிமானம் மிக்க மேலான சாதனமாக விளங்குகின்றது. அவித்தையினுலும் அஜாக்கிரதையினுலும் மனமும் உடலும் பாழாவது போல், சுதேசப் பற்றின்மையினுலும் பாராமுகத்தினுலும் தேசமும் அத்தேசத்தினரும் அலக்கணுற்று மாய்கின்றனர். கடுந்துறவிகளும் சமய சூஸ்திரர்களும் மூடபக்தியர்களும் மாந்தர்க்கியல்பான அகப்புறப்பற்றுக்களை ஒடுக்கி யடக்கிவரப் பன்முறை வற்புறுத்திவருகிறார்கள். இவ்விதஞ் செய்தல் யாவர்க்கும் எளிதானதுமல்ல; மேலும், உத்தமமானதுமல்ல. ஒருவனுடைய சரீரம் நானுவித நோய்களால் தாக்குண்டு வருந்துகையில், "இத்தேகம் அநித்தியமானது. அதற்கும் எனக்கும் எத்தகைய சம்பந்தமுமில்லை. அதைத் துறப்பதற்காகவே பிறந்திருக்கும் யான் அதைச் சீராட்டிப் பாராட்டிக் காத்தல் தகாது" என அவன் குதர்க்கம் பேசுவனுயின், அவனுடைய விவேகத்தைப் பற்றியும் வாழ்க்கைப் டயனைப் பற்றியும் யாம் யாது சொல்வது? இவ்வுலகமும் உலகாதிகளும் பொய்யெனப் பாவித்து, அகப்புறப்பற்றுக்களை ஒழித்து, ஞானத்தின் அபிவிர்த்திக்கும் ஆன்மாவின் பொலிவுக்கும் நன்மைக்கும் இத்தேகம் ஓர் பெருந் தடையெனக் கொண்டு, அதன் சௌகரியா சௌகரியங்களை அவமதித்தும், விநாடிதோறும் வளர்ந்து வியாபித்துவரும் இன்னல்களைப் பாராதும், தன்னினத்தாரின் முன்னேற்றத்தைச் சிறிதேனும் கவனியாதும் இருந்து வருபவனே ஞானி? அத்தகையனுடைய வாழ்க்கையோ புனித வாழ்க்கை? கணக்கற்றுப் பலதிறப்பட்ட இடையூறு இடுக்கண்களிலகப்பட்டுத் தத்தளி

க்கும் துர்ப்பாக்கியர்களுக்கு உதவிபுரிந்து அவர்களை மேலெ ழுப்புபவனன்றோ பெருமகன், கலைஞன். இதற்காகவல்லவோ ஒவ்வொரு ஆன்மாவும் இப்புவியின்மீது ஜனித்து இருந்து வருவது. இதற்கு அபிமானமும், தன்னம்பிக்கையும், நன்னம் பிக்கையும் அத்தியாவசியமானவையன்றோ? ஒவ்வொருவனும் தன் ஜீவனை அபிமானித்து அதன் நிமித்தம் தன் தேகத்தைப் போற்றிவருவதுபோலும், பிள்ளைகள் தம் பெற்றோர்களை நேசித்து அவர்களுக்குக் கீழ்ப்படிந்து நடத்தல்போலும், குடு ம்பத்தினர் தம் குடும்பத்தின் நன்மையை முன்னிட்டு மன மொத்து உழைத்தல்போலும், இவற்றிற்கெல்லாம் ஆதார மான சுதேசத்தை ஒரு ஜாதியார் நேசித்து அதன் பெருமை யைக் கருதி உழைப்பது. நம்மை நொந்துபெற்றுப் பாலூட் டிச் சீராட்டிப் பாராட்டி வளர்த்த தாயை நிந்தித்தலும் பழித் தலும் உதைத்தலும் அலக்ஷியஞ்செய்தலும் இழியவையன் றோ? நம்முடைய மனஹிருதயங்களைச் சுத்தப்படுத்தி உயர் ர்த்தி, ஆழ்ந்து பரந்த ஞான அறவிஷயங்களை அறிவித்துவ ரும் தந்தையை நிராகரித்தல் தகுதியோ? குடும்பத்தினரின் மனோவேற்றுமைகளினாலும், மெய்ப்பொருளை அறியாமையி னாலும், பொய்யைத் தவிர்த்து மெய்யைப் பின்பற்றி ஒழுகுத ற்கான ஆண்மையின்மையினாலும் அக்குடும்பத்தினர்க்குள் ளுண்டான ஒற்றுமை பறக்கவே, எவ்வண்ணம் பலங்குன்றி அக்குடும்பம் சீர்கெடுகின்றதோ, அவ்வண்ணமே ஆயிரக் கணக்கான குடும்பங்களைத் தாங்குவதான தேசத்தின் மகி மை அத்தேசத்தினரின் விபரீதக் கொள்கைகளினாலும் நடத் தைகளாலும் துகளாகப் போய்விடுகின்றது. குடும்பத்தினர் க்குள் ஒற்றுமையும் அபிமானமும் உளவாயின் அக்குடும்பம் நாட்குநாள் பெருகித் திகழ்ந்து விளங்குவதுபோல், தேசத்தி னர்க்குள் இணக்கமும் சுதேசப்பற்றும் இருக்குமாயின் அத்

தேசம் உச்சதசையுற்றுச் சிறப்புடன் விளங்கும். சரித புத்தகங்களை விரித்துப் படிப்போமாயின், சுதேசாபிமானத்தின் உத்தம குணத்தையும், ஒற்றுமையின் நற்பயன்களையும், இவற்றினின்று உண்டாகும் வீரதீர காரியங்களையும் நாம் தெளிவாக அறியலாம். சுருக்கத்தில், ஞானத்தின் விசாலத்திற்கும், அறத்தின் வியாபகத்திற்கும், நாகரீகத்தின் கிளர்ச்சிக்கும், மாந்தரின் முதிர்ச்சிக்கும் மூலாதாரமாவது சுதேசாபிமானமே.

சுதேசாபிமான மென்பது ஆண்பிள்ளைகளிடம் மாத்திரம் தோன்றி வளர்வதல்ல. ஸ்திரீகளில்லாது குடும்பம் இல்லை; அல்லது ஸ்திரீகளில்லாத குடும்பம் பிரகாசிப்பதில்லை. வாழ்க்கையின் நன்மைகளுக்கெல்லாம் உற்பத்தி ஸ்தானமாகவும் விளைநிலமாகவும் உள்ளது குடும்பமே. குடும்பத்தின் தீபம் தாய். பிள்ளைகளின் முதற்குரு அன்னை. பிள்ளைகளின் ஏற்றமும் இறக்கமும் அவர்கள் தம் குழந்தைப் பருவத்திலும் பாலியத்திலும் தம்முடைய தாயாரிடமிருந்து பெற்ற உபதேசங்களையும் அப்பியாசங்களையும் பொருத்திருக்கின்றன. குடும்பத்தினர்க்குள் ஒற்றுமையையும் பரஸ்பர வன்மையும் ஊட்டிப் பெருக்குவது ஸ்திரீகளே. தேசத்தினர்க்குள் ஒற்றுமையும், சுதேசாபிமானத்தையும், பரோபகார சிந்தனையையும் விருத்திசெய்வது அப்பெண்பிள்ளைகளே. சுதேசம் விரோதிகளால் எதிர்க்கப்பட்டுச் சின்னபின்னமாக்கப் படுகையில், புருடர்களுடன் ஸ்திரீகளுஞ் சேர்ந்து சாமான்ய காரியங்களைச் செய்து அவர்களுக்கு உதவிபுரிவதுடன் நில்லாது, தாமும் போர்க்கோலம் பூண்டு ஆயுதங்களை ஏந்தி முன்வந்து தம் புருடர்கள் வியக்கும்படிக்கும் எதிரிகள் சித்தங்கலங்கி ஏக்கமுறும்படிக்கும் யுத்தஞ்செய்ததாக ஆதி காலத்திய கார்த்த ஜீனியர்கள், ரோமர், கிரேக்கர் பிரென்சுக்

காரர், க்ஷத்திரியர் முதலானவர்களின் சரிதங்கள் அறிவிக்கின்றன.

சுதேசாபிமானம் என்பது யாதெனில், ஓர் தேசத்தினர் தமக்குரித்தானவைகளைப் பெற்று அபிவிர்த்திசெய்து பாதுகாத்து, தம் தேசத்தின் பெருமையைப் பிரஸ்தாபித்து, எல்லாவிதங்களிலும் தாம் ஓர் நிகரற்ற ஜாதியராக விளங்க வேண்டுமென்ற நல்விருப்பமே. இவ்விருப்பத்தை யுடைத்தாயிராத குடிகள் மானுடராசியைச் சேர்ந்தவர்களல்ல. சுதேசாபிமானமென்பது விண்ணுலகாக்கினி. அது கொழுந்துவிட்டெரிகையில், அதினுடைய ஜோதியைப் பார்த்துப் பார்த்து மனம்பூரித்து மகிழ்வுறமுடியுமேயல்லாது, அதின் தாரதம்மியத்தைக் கவனித்துக் கூற முடியாது. இத்தகைய சிறப்புவாயப்பெற்ற சுதேசாபிமானத்தைப் பெருக்கிப் பலப்படுத்துவது ஒற்றுமை.

தேகாரோக்கியத்திற்கும், மனமவமைதிக்கும், அறிவின் முதர்ச்சிக்கும், நாகரீகக் கிளர்ச்சிக்கும், சுதந்தரத்தின் வளர்ச்சிக்கும் துணையாவது ஒற்றுமை. ராஜ்யத்தின் அழிவுக்கும், குடும்பங்களின் சிதைவுக்கும், வாழ்க்கைமீது தோன்றும் வெறுப்புக்கும் காரணமாவது ஒற்றுமை யின்மையே. ஒற்றுமை, இணக்கம், பொருத்தம், சீர், ஒழுங்கு என்பன ஒருபொருட் சொற்கள். ஒவ்வாமை, பிணக்கம், விரோதம், அசம்மதி, வேற்றுமை முதலானவை முன்கூறியவைகளுக்கு மறுதலையான ஒருபொருட் சொற்கள்.

ஆரோக்கியத்திற்குத் தேகவுறுப்புக்களின் ஒற்றுமை பிரதானமாவதுபோல், குடும்பம், சங்கம், ராஜ்யங்களின் உயர்ச்சிக்கு அவைகளின் அங்கத்தினர்க்குள் ஒற்றுமை இன்றியமையாதது. கீழோர் மேலோர்க்குக் கீழ்ப்படிந்து நடக்க வேண்டும். மேலோர் தம் ஆதீனத்திற குட்பட்டவர்களை

நன்னெறியிலிருத்திச் சரிவர ஆதரித்துவரவேண்டும். வஞ்சகம், பொறாமை, பராமுகம், கர்வம் முதலான தீக்குணங்களை யொழித்துச் சீரியகுண வொழுக்கங்கள் பொருந்தியவராய் இருக்க யாவரும் முயலவேண்டும். இவ்விதமில்லாது, ஒருவர்க்கொருவர் வெளிக்கு உறவினர்போலவும், உள்ளத்தில் விரோதிகளாகவும், அல்லது உள்ளம், புறம் இரண்டிலும் தீராப் பகையர்போலவும் நடிக்கத் தலைப்படுவர்களாயின், சிறுகுடும்பமானாலுஞ்சரி, பெருஞ்சங்கமானாலுஞ்சரி, அல்லது எல்லையற்ற ராஜ்யமானாலுஞ்சரி, இவைகளெல்லாம் இருந்தவிடந்தெரியாது பறந்துபோம்.

மிடி, பேதகம், அசூயை, அகந்தை, கொலை, களவு, போர், கட்காமக்குரோதாதிகள் அவித்தையும் தற்சிந்தனையும் கூடிப் பொருந்தியுள்ள சேற்றினின்று முளைகிளம்பி மேல் வளர்கின்றன. இச்சேற்று நிலங்களை விவேகம், ஞானம், இணக்கம்,பரோபகாரம் என்பனவற்றால் ஒழுங்கு படுத்தினால், முன்கூறிய தீமைகள் தாமே அடங்கிப்போம்.

ஒற்றுமையை மேன்மேலுயர்த்தி நிலைக்கச் செய்வன சுதேசாபிமானமும் ஆத்மார்ப்பணமுமே. தேகத்திலுள்ள ஒவ்வொரு அவயவமும் எவ்வாறு பொது நன்மையை முன்னிட்டு, ஏற்றம்,தாழ்வு, சோம்பல், அலக்ஷியம், மமதை என்பனவற்றால் பீடிக்கப்பட்டுச் சீர்கெடாது முறைப்படி நடக்கின்றனவோ, அவ்வாறே மானுடராசியாகிய பெருஞ் சரீரத்தின் அங்கங்களான மனிதர்கள் மேற்சொல்லியவைகளால் கவரப்படாது எத்தகைய பிணக்குமில்லாது ஒத்து நடக்கவேண்டும். தேகவுறுப்புகளிலேதேனுமொன்றுக்கு அபாயம் நேரிடுங்காலத்தில் இதர உறுப்புக்கள் அவ்வபாயத்தைத் தீர்ப்பதுபோல், மாந்தர்க்குள் எவராயினும் ஒருவர் இடருற்று வருந்துங்கால், பிறர் உடனே முன்வந்து அவர்க்கு உதவி

செய்யவேண்டும். சுருக்கத்தில், சுதேசாபிமானம், ஒற்றுமை, பரோபகாரசிந்தனையாகியவைகள் ஒன்றையொன்று இடைவிடாது தொடர்ந்துசெல்லவேண்டும். புஷ்பங்களின் பலநிறப்பட்ட இனிய தோற்றங்களுக்கும் நறுமணத்திற்கும், ஜீவராசிகளின் வளர்ச்சிக்கும், மனதிருதயங்களின் எழுச்சிக்கும் விசாலத்திற்கும், ராஜ்யங்களின் மேன்மைக்கும், குடும்பங்களின் க்ஷேமத்திற்கும் சங்கங்களின் நன்மைக்கும் பெருகத்திற்கும் மூலகாரணமாவன ஒற்றுமையும் பரோபகாரகுணமுமே.

அபிமானம் என்பது பலவிதங்களில் வெளித்தோன்றலாம்: சுதேசத்தின் மீது இருக்கலாம்; சுதேசத்தினரின் லக்ஷியங்கள், அநுஷ்டானங்களின்மீது இருக்கலாம்; படித்துப் பண்டிதனாகவேண்டு மென்றிருக்கலாம். இவைகளொவ்வொன்றும் சிலாகிக்கத் தக்கதானாலும், இவைகளுக்கெல்லாம் தலைமைபூண்டு விளங்குவது சுதேசாபிமானமே. சித்திரம் எழுதச் சுவர் ஒன்று வேண்டுமல்லவோ? இருக்க வீடும் தேசமும், இவைகளைக் காப்பதற்கான வீரமும் அபிமானமுமில்லாவிடின், மேற்கூறிய இதர விருப்பங்கள் எங்கிருந்து தோன்றி எவ்வாறு பூர்த்தியாகும்? மேற்கூறிய அபிமானங்கள் வித்தியாசங்களை உண்டுபண்ணக் கூடியவையானாலும், அபாய காலங்களில், அவ்வித்தியாசங்களைப் போக்கி, அல்லது அடக்கி யாவரையும் ஒருங்கு சேர்ப்பித்து, சமத்வர்களாகப் பாவித்து ஒழுகச் செய்வது சுதேசாபிமானமே. ஆதலின், இதுவே மாந்தரனைவராலும் முன்கவனித்துப் பெருக்கப்படத்தக்கது.

இன்னமும், சுதேசப்பற்றும் ஒற்றுமையும் உள்ளவிடத்திற்றான் சுதந்தரம் தோன்றி வியாபிக்கும். முன்னிரண்டும் இல்லாத விடத்தில் பின்னதுதோன்றுது.பின்னது கிழடைந்து

மறையுமாயின், குரூரன் என்ற வேடனால் விவரிக்கப்பட்ட அடிமை வலி வருத்தம், வக்கம் என்ற நூற்களால் பின்னப் பட்ட கொடிய வலையிற்சிக்கி அலறி மரிக்கவேண்டிவரும். அவிவேகம், அஞ்ஞானம், மூடபக்தி சமய சூஷாத்திரம், பிடி வாதம் முதலானவைகளே ஒற்றுமையின் சத்துருக்கள்.

தாளாண்மை, சகவாசப்பிரியம், மேலேறவேண்டுமென்ற நல்விருப்பம், இவ்விருப்பம் கைகூடிவருவதற்கான ஊக்கம், உழைப்பு, பொறுமை விஷயங்களை ஆய்ந்தோய்ந்து நிதானித் துப் பார்த்தறியுங்குணம், மெய்ம்மதத்தின் லக்ஷணம், மேன்மை, மூடபக்தியின் தாழ்மை, சண்டை சச்சரவுகளின் இழிவு, எதிர்த்து அடக்கவேண்டியவைகளை எதிர்த்து அடக்கி, அஞ்சவேண்டியவைகளுக்கு அஞ்சி அவைகளை ஒதுக்கி, அவரவருக்குரித்தான கடமைகளைப் பழுதற அறிந்து பின்பற்றிச் செய்வதற்கான இயல்பு முதலானவை களைப் பெற்றோர்கள் தம் பிள்ளைகளுக்கு இளமை முதற் கொண்டே கற்பித்து வரவேண்டும். மேலும் ஆதிகாலமுதல் இந்நாள்வரையிலும் ஒவ்வோர் இடங்களிலும் அவதரித்த சூரர்கள், ராஜ்யாதிபதிகள், அறவோர், கவிஞர், தத்வஞர் களின் ஜீவசரிதங்களையும் தேச சரிதங்களையும் சிறுவர் சிறுமி யர் யாவரும் பரிபூரணமாகப் படித்தறியவேண்டும். இதற்கான ஏற்பாடுகளைக் கலாவல்லவர்கள் முன்வந்து செய்யவேண்டும்.

மூடபக்தியும் சமயசூஷாத்திரமும் பரவி நிற்குமிடம் நாளா விர்த்தியில் அல்லோலகல்லோலப் பட்டழியும். ஒற்றுமை, அன்பு, அடக்கம், விவேகம் என்பன வாதிகள் கிழடைந்து நிற்கும் ராஜ்யங்களும் பிரஜைகளும் துன்புற வேண்டிவரும். அழுக்காறு, அலக்ஷியம், ஒரு தலைச் சார்பு அல்லது பக்ஷபா தம் அல்லது அநீதி, மோசம், மெய்யையும் நன்மையையும் உணர்ந்தறியாமை, அல்லது உணர்ந்தறிந்தும் முறைப்படி நடவாமை யாகிய தீமைகளை உடைய ராஜாங்கமும் குடியும் வேறுபட்டு க்ஷீணித்துப்போம். அடிமையாகிய வலிய இரும் புச் சங்கிலியினால் கட்டப்பட்டு அலமந்து வாடி மடியும். பேதையர்கள் ஒற்றுமையாகிய வாளினால் அதை அறுத்துச்

சுதந்தரம் பெற்று இனித்திருக்கலாமென்பதற்கு ஐரோப்பியர்களின் சரிதங்களே தக்க சான்று பகர்வன.

ஒற்றுமை யில்லாது மூர்க்கன் நாகரிகனாகான்; போர், கொலை, களவு, கட்காமக் குரோதாதிகள் குறைவடையா; மாந்தரின் மேலான லக்ஷியங்கள் நிறைவேறா; கல்வி யறிவுகள் விருத்திக்கா; தொழிற்கள் பெருகா; இன்ப சுகங்களும், சமாதானமும் நிலையா.

கொடுங்கோன்மை எந்நாளும் நீடித்துநிற்காது. நீசகுணங்களான பேராசை, பிடிவாதம், இறுமாப்பு, நாஸ்திகம் முதலானவைகளால் ராஜ்யாதிபதிகள் பீடிக்கப்பட்டு, தம் கையிலுள்ள செல்வாக்கின் காரணத்தால், மதம்பிடித்த யானையைப் போல், வெறிகொண்டு தம் குடிகளைத் தம்மிஷ்டப்படிக் குரூரமாக நடத்தி நாட்டின் முன்னேற்றத்தையும், பிரஜைகளின் நன்மையையும், கல்விப் பெருக்கையும் பொருட்படுத்தாது, சுயசுகபோகங்களிலேயே யழுந்தி இவ்வுலகமும் உலகாதிகளும் தம்மினத்தாரும் தமக்குத் தொண்டு செய்வதற்காகவே இருந்து வருவதாகப் பர்வித்து அவர்களைப் பழித்து உதைத்துவரவே கூடிய வரையில் பொறுத்துவந்த குடிகளும் மேற்கூறிய அசம்பாவிதங்களை நிவர்த்திப்பதற்காக அவ்வப்போது அவதரித்துவரும் பேரான்மாக்களும் தக்க வழிகளால் அம்மூர்க்கர்களை யடக்கித் தம் நாட்டை நல்லநிலைமைக்குக் கொண்டுவரத் தலைப்படுகிறார்கள். பொய்யும் கபடமும் பேராசையும் மிதமீறிய அதிகாரமும் அபார பலம் பொருந்தியனவ் போல வெளிக்குத் தோன்றிய போதிலும், மெய்ச் சக்தியும் தெய்விக நீதியும தூரிய ஞானமும் மேம்படவே அவ்விழி குணங்கள் தாமே அடங்கும், அலலது பலாத்காரமாக அடக்கப்படும். ஜனங்களின் முன்னேற்றத்திற்கு விரோதமாக நடத்துவரும் ராஜாங்கத்தினர் கோடிக்கணக்கான சேனைகளையும் லக்ஷக்கணக்கான பீரங்கி துப்பாக்கிகளையும் உடைத்தாயிருந்தபோதிலும், ஒருநாள் சத்தியம் என்ற பிரம்மாண்ட சக்தியினால் முறியடிக்கப்பட்டு எத்தகைய உதவியுமில்லாது தயங்கி மடிவார்கள்,

தீமைகள் சீக்கிரத்தில் நாடெங்கும் பரவும்; நன்மையோ நாலாபக்கங்களில் வியாபித்து நிலைத்தற்கு நெடுநாள் வேண்டி வரும். மேலும், நன்மையை நாடி உழைப்பவர்களைப் பற்பல தீமைகள் மேற்கிளம்பிக் கலக்கிச் சோர்வடையச் செய்யும். எனினும், விசுவாசம், ஊக்கம், மனவெழுச்சி, தன்னம்பிக்கை, கடவுள் பக்தி முதலானவைகளைக் கைநெகிழவிடாது உழைப்பவர்கள் இறுதியில் வெற்றியடைவார்களென்பதிற் சிறிதும் ஐயமில்லை. பாழ்பூமிகளை விளைநிலங்களாகமாற்றி உழுது பயிரிட்டவுடன், எவ்வாறு அவைகளைத் தெண்ணீரும் சூரியனும் செழித்தோங்கி வளரச்செய்து அந்நிலங்களைச் சிறப்பிக்கின்றனவோ, அவ்வாறே கொடுங்கோல் ராஜ்யமான பாழ்பூமியை நல்லான்மாக்கள் செப்பனிட்டு, சுதேசாபிமானம் ஒற்றுமை, நன்னம்பிக்கையாகிய விதைகளை விதைக்கவே தெண்ணீரையும் கதிரவனையும் ஒத்த நற்காலமும் வீரனும் உதித்து அவைகளை மேலோங்கி வளர்த்தி, பாழ்பூமியான கொடுங்கோலரசை அழித்துச் செங்கோலரசைப் பிரஸ்தாபித்து, எல்லாருடைய மன ஹிருதயங்களைக் குளிர்ப்பித்து ஆனந்திக்கச் செய்கிறார்கள். எத்தகைய நன்மையின் வியாபகத்திற்கும் ஸ்தாபனத்திற்கும் தக்க காலமும் காலத்திற்கேற்ற சூரனும் இன்றியமையாத சாதனங்கள். காலவேறுபாட்டினால் அதிபுத்திசாலிகள் தம் எண்ணங்கள் நிறைவேறாது பரிதபித்துத் தளர்வுறுவதையும், காலம் ஒத்திருப்பினும், விவேகமும், வாய்மையும், நேர்மையும், மனோதிடமும், தேகவன்மையும் நிரம்பிய உத்தம புருடனொருவன் அவதரிக்காததினால், அந்நற்காலம் இருண்டுபாழாய்ப் போவதையும் நாம் அறிவோம். நிலைதடுமாறித் தத்தளித்து விழாநிற்கும் ராஜ்யத்தின் சுபிக்ஷத்திற்குச் சரியான காலமும் காலத்திற்குத் தக்க மகானும் உண்டாகவேண்டும். எனினும், அவைகளை எதிர்ப்பார்த்துக் கொண்டேயிருந்து, தாம் பின்பற்றிச் செய்ய வேண்டியவைகளை எவரேனும் துறக்கக்கூடாது. தெண்ணீரையும் சூரியனையுமே நம்பி நாம் அவமே இருந்துவிடின் பாறை நிலங்களிலிருந்து பசும்புற்களும் தழைத்துத் தொங்கும் கதிர்களும் எவ்வாறு உண்டாகும்? இவ்விஷயங்களை நிரூபிப்பதாகும் இத்தாலியாவின் சரிதம்.

(தொடரும்).

66. அவையஞ்சாமை.

"பகையகத்துப் பேடிகை ஒள்வாள், அவையகத்து
அஞ்சும் அவன் கற்ற நூல்''—திருக்குறள்.

இதன் பொருள், 'தன் கல்வித்திறனைக்காட்டிப் பேசுதற்குரிய சபைநடுவே, அச்சபையை அஞ்சும் ஒருவன் வருந்திக் கற்ற நூலானது, எதிர்ப்படும் பகைநடுவே அதனை அஞ்சும் பேடிபிடித்த கூர்வாளை ஒக்கும்' என்பது. அச்சியந்திர உதவியினால் புத்தகப் பிரதிகளும் பத்திரிகைகளும் ஆயிரக்கணக்காகப் பரவி வழங்கும் இந்நாளில்கூட அவையஞ்சாத சொல்வன்மை எவ்வளவு பயன் தருகின்றதென்பதை ஊன்றி நோக்குவார்க்கு, அப்பேருதவி யில்லாதகாலத்திலே நாயனார் இவ்வணம் கூறியிருப்பது வியப்பைத் தராது.

67. யோகமார்க்கமும் பக்திமார்க்கமும்.

1. "ஊசிமுனை நின்றுமெ(ன்)ன? தாழ்குகை நுழைந்துமென?
ஊமரில் இருந்துமென? வளை[1] போலே
காசினி[2] சுழன்றுமென? வானிடை பறந்துமென?
காயம்[3] இது எழுந்துவிழும் வினைபோமோ?
நீசரையும் அண்டர் செயும்[4] சோலை மலையின் கண், ஒரு
நீலமலை உண்டு, தொழும்; இயலாதேல்,
கேசவ! முகுந்த! மதுசூதன! அனந்த! கக
கேதன! எனும்; உளரின், நினைவிரே.''

---

1. சக்கிரம் சுழலுவதுபோலே; 2. பூமியில்; 3. தேகம் 4. தேவர்களாக்கும்.

2. "தேறாத வனம்போய், யௌவனமும் போனீர்;"
　　சிறு கிழங்கைக் கொண்டு, பெரும் கிழங்கைக் கொண்டீர்;
மாறாத் சருகுதின்று சருகு பட்டீர் ;
　　வாயு நுகர்ந்தீர் வாயும் மௌனமானீர்;
ஏறாத பலம் சுவைத்(து) ஓர் பலமும் காணீர் ;
　　இலைமேய்ந்தும் பேறுஇலையே ; இதுவோ யோகம்!
ஆறாத தீயில்[5] நிற்பீர், தீயரே[6]! நும்
　　அருந்தவமோ தவம்! அழகர்காட்டீரே."

—அழகர் கலம்பகம்.

இவ்விரு செய்யுள்களில், முதற்செய்யுளில், சரீரத்தாலும் வாக்கினாலும் மனத்தினாலும் முறையே தெய்வத்தை வழிபடும் உபாயம் கூறியிருப்பதும்; இரண்டாமதில் எளிதாய் அழகாய் அமைந்துள்ள சிலேடைகளும் கவனிக்கத்தக்கன,

அ ம்.

---

5. பஞ்சாக்கினி மத்தியில். 6. பார்ப்பார்-தீசர். 7. இகழ்ச்சிச் சிறப்பொன்று; மற்றொன்று, 'அருந்தவம் X ஏது X அவம்' என்பது.

குறிப்புகள்

Notes.

கண் வைத்தியம்.

நோயுற்ற கண்ணைக் கழுவதற்பொருட்டு கண்ணினுள் விடப்படும் லோஷன்கள் (Lotions) அல்லது மருந்து கரைத்த திரவங்களை கண்ணின் உட்புறமாக, அதாவது மூக்கின் பக்கமாக விடுதலே தகுதி. அப்பொழுது கண்ணின் உட்புறம், அதாவது மூக்குப்பக்கம் உயர்ந்தும், வெளிப்புறம், அதாவது காதுப்பக்கம் தாழ்ந்தும் இருத்தல் வேண்டும். அப்படியானுல் தான் கழுவப்பட்ட அசுத்தம் தீங்கு செய்யாது வெளிப்பட்டுவிடும். அப்படியின்றிக் கண்ணின் வெளிப் புறத்தினின்று கண்ணைக் கழுவினுல் கழுவப்பட்ட அசுத்தமானது மூக்குப்பக்கமாக ஓடி அங்கிருக்கும் கண்ணீர்ப்பையினுள் (Lachrymal Gland) புகுந்து அதில் அசுத்தத்தைப் புகுத்திக் கண்ணுக்குநோயையே விளைக்கும்.

கண்ணில் தங்கியிருந்து பயன்தரும் மருந்துகளை மூக்குப் பக்கமாக விடுவதால் சிறிதும் பயன்தாராது போய்விடுகிறது. ஏனெனில் கண்ணில் விட்ட மருந்தானது கண்ணீர்ப்பைக்குள் சென்றுவிடுகிறதேயன்றிக் கண்ணுக்கு உபயோகமாவதில்லை. ஆதலால் அவ்வகை மருந்துகளைக் காதுப்புறமிருந்து விடுதலே தகுதி.

அறிவுநூல் மொழிகள்.
Scientific Terms.

மனோன்மணீயம் என்னும் நாடகமியற்றிய காலஞ்சென்ற பிரோபஸர் பி. சுந்தரம் பிள்ளை அவர்கள் M. A. எழுதிய நூற்றொகை விளக்கம் என்னும் நூலின் அனுபந்தத்தினின்று கீழே காணும் மொழிகளை எடுத்திருக்கிறது.

BIOLOGY	உயிர்நூல்
Anatomy	அங்கவிபாகம்
Animal Kingdom	சரவுயிர்
Arthrozoa	கீடாதி
Assimilation (of food)	உண்ணல்
Brain	ஆஞ்ஞாசக்கிரம்
Function of organs	அங்க வியாபாரம்
Life	உயிர் ; ஜீவன்.
Intestines	பக்குவாசயம்
Mammalia	சராயுஜம்
Mildew	மழைப்பூ
Mollusca	சிப்பிவாழுயிர்
Muscle	புலால்
Organ	உறுப்பு
Organism	உடம்பு
Oviparous	அண்டஜம்
Protozoa	பிரதமஜீவி
Radiata	சக்கரரூபி
Reflex Action	புலாற்றொழில்
Reproduction	உற்பாதனம் ; பிரத்தியுற்பாதனம்
Sense	புலன்
Spinal Cord	நடுநாடி
Lower end of	மூலாதாரம்
Stages of Development	பக்குவ வேறுபாடு
Stomach	ஆமாசயம்
Vegetable Kingdom	தாவரம்
Vertebrata	வீணைத்தண்டி

நமது நேசனைப் படிக்கும் நண்பர்கள் இம்மொழிகளை நன்கு ஆராய்ந்து அவற்றுள் யாவற்றைபாயினும் தாம் ஒப்ப முடியாதென நினைப்பின் அவற்றிற்கு ஈடான மொழிகளை எனக்கு எழுதி அனுப்பும்படி தாழ்மையாய் வேண்டிக் கொள்ளுகிறேன்.

துணைக் காரியதரிசி,
தமிழர் கல்விச் சங்கம்.

மதிப்புரை
Review.

குணம் நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்
மிகை நாடி மிக்க கொளல் — திருக்குறள்.

ஸ்ரீமத் கௌதம புத்தர், (ஸ்ரீமான் C. R. ஸ்ரீநிவாசய்யங்கார் எழுதி, சுதேசமித்திரன் ஆபீசாரால் வெளியிடப்பட்டது. விலை அணா ஐந்து.)

தம் பொருட்டே உலகிலுள்ள பிற யாவும் அமைக்கப்பெற்றன வென்பது தம்மையே பெரிதாகக் கருதிவரும் மனிதஇனத்தின் துணிந்த கொள்கை. நமதுபொருட்டே கடவுளும் அவ்வப்போது பாடுபட்டு வருகின்றனரென்றே பிற மதங்களில் போலவே இந்து இதிகாச புராணங்களிலும் கூறப்பட்டிருக்கிறது. பாபம் நிலைகுலைந்து வாழ்க்கை சீர்கெடும் நாட்களில் கடவுள் மனித உருவத்தோடு இங்கு பிறந்து நல்லாரைக் காத்தோ தீயாரைத் தொலைத்தோ நம்மை இன்புறச் செய்தருளுவதாக நமக்கு வாக்களித்திருக்கின்றாரென நாம் அறிகிறோம்.

இவ்வாறு தோன்றிவரும் கருணைவள்ளல்கள் மதத்துக்கேற்றவாறு வேறுபடுகின்றனர். அவர்களுள் கௌதமபுத்தர் ஒருவரென்றும் அவர் விஷ்ணுவின அவதாரமென்றும் சிலர் கூறுகின்றனர். சிலர் இதை மறுக்கின்றனர். அசுரரைமயக்கி அவரது குலத்தையே வேரோடு அறுப்பதற்கென்றே தோன்றிய மோகினியும் விஷ்ணுவின் அவதாரமாவதுபோல இவரும் மெய்யான வேதம் சொல்லும் வழியினின்று தீயாரை விலக்கச்செய்து அவரைத் தீவழியில் புகுத்தித் தொலைப்பதற்கான தீநெறியைப் போதிக்கவந்த அவதாரமென்று இவர் கூறுகின்றனர்.

கல்பாந்தர பேதமுள்ள இவ்விரு கொள்கைகளிலும் பற்றின்றி நடுவே நின்று, கௌதமபுத்தர் கூறிய மொழிகளின் பொருளையும், அவரது நடத்தையின் பெருமையையும் அறிய விரும்புவார் பலருளர்.

இப்புத்தகத்தில் அவ்விஷயங்கள் நன்றாக எடுத்துரைக்கப்பட்டிருக்கின்றன. கௌதமர் புரிந்த இன்ப வாழ்க்கையும், கண்ட துன்பக் காட்சியும், கொண்ட துறவின் நோக்கமும், அடைந்த அறிவின் சித்தியும் கூறிய மதத்தின் கொள்கையும் சுருக்கமாகவும் தெளிவாகவும இப் புததகததில் கூறப்பட்டிருக்கின்றன.

அ.